

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் விழுப்புரம் நகரத்தில் நடைபெற்ற கோல போட்டிகளை பார்வையிட்டு வெற்றி பெற்ற மகளிர்களுக்கு பரிசுகளை கழக துணை பொது செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி எம்.எல்.ஏ. வழங்கினார். நிகழ்ச்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட ந.வயிரவன்பட்டியில் சுற்றுலாத்துறை மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பில் 14.1.2026 அன்று நடைபெற்ற பொங்கல் விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தலைமையில் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் சுற்றுலா அலுவலர் திருவாசன் உட்பட பலர் உள்ளனர்.

### 2026 சட்டமன்றத் தேர்தலில் மக்களின் பேராதரவுடன் அமோக வெற்றி பெற்று

# ஏழாவது முறையாக திராவிட மாடல் ஆட்சி அமையும்!

### கள்ளக்குறிச்சியில் பொங்கல் பரிசு வழங்கும் விழாவில் அமைச்சர் எ.வ.வேலு உறுதி!

கள்ளக்குறிச்சி,ஜன.19-

கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டத்தை சேர்ந்த 4 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி தியாகதுருகத்தில் உள்ள தாமரை மஹாலில் நடைபெற்றது, இதற்கு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்எல்ஏ தலைமை தாங்கினார், வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்எல்ஏ, வடக்கு மாவட்ட கழக அவைத்தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்எல்ஏ, தே.மலையரசன் எம்பி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுபணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கி பேசியதாவது:



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் முதல்வராக இருந்த காலத்தில் தமிழர் திருநாளை கொண்டாடும் வகையில் முதன் முதலாக பொங்கல் பரிசு தொகுப்பு மக்களுக்கு வழங்கினார். அதேபோல் இந்த ஆண்டு தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்கள் அனைவரும் பொங்கலை மிக சிறப்பாக கொண்டாடும் வகையில் பொங்கல் பரிசு பொருட்கள் மட்டும் இல்லாமல் ரூ.3,000 ரொக்க பணத்தையும் சேர்த்து கொடுத்தார். இதனால் தாய்மார்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேலும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தேர்தல் பொறுப்பாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு தேர்தல் பணிகளை மிக சிறப்பாக செய்து வருகின்றனர். 4 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது.

தற்போது அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியம் திட்டம் அறிவிக்கப்பட்டதால் அவர்களும் நம்மோடு இணைந்துள்ளனர். இதனால் 2026ம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் மக்களின் பேராதரவுடன் அமோகமாக வெற்றி பெற்று திமுக தமிழகத்தை 7வது முறையாக ஆளப் போகிற ஆண்டாகவும், மகிழ்ச்சியான ஆண்டாகவும் அமையும் என கழக நிர்வாகிகள் முன்னிலையில் சிறப்புரையாற்றினார்.

இதில் மாநில மகளிர் அணி துணை செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி, ரிஷிவந்தியம் தொகுதி பார்வையாளர் பெருநற்கிள்ளி, கள்ளக்குறிச்சி தொகுதி பார்வையாளர் தாமரைகண்ணன், சங்கராபுரம் தொகுதி பார்வையாளர் அன்பழகன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், தேர்தல் பொறுப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட பல்வேறு கழக நிர்வாகிகள், உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

### டாக்டர் சேகர் ஏற்பாடு — ஓலக்கூர் ஒன்றியம்

# தாதாபுரம் ஊராட்சியில் சமத்துவ பொங்கல் விழா!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திண்டிவனம், ஜன.19-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஓலக்கூர் கிழக்கு ஒன்றியம் தாதாபுரம் ஊராட்சியில் சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி திராவிட சமத்துவ பொங்கல் விழா தாராபுரம் ஊராட்சியில் நடைபெற்றது.

ஒலக்கூர்மேற்கு ஒன்றிய செயலாளரும், ஒன்றிய துணைச் சேர்மன் ராஜாராமன், மாநில பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை ஆகியோர் முன்னிலையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர் ஏற்பாட்டில் நடைபெற்ற திராவிட சமத்துவ பொங்கல் விழாவை

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்.

சமத்துவ பொங்கல் விழாவில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு புது பானை வைத்து பச்சரிசியிட்டுபொங்கல் வைத்து சமத்துவ பொங்கலை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

இதைத்தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு வேட்டி சாலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாவட்ட பொறுப்பாளர், செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி,தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய செயலாளர்கள் வல்லம் வடக்கு அண்ணாதுரை, மதியம் இளம்வழுதி,ஒன்றிய நிர்வாகிகள்அமராவதி, திருஞான சம்பந்தம், காளி, சுப்பிரமணியன்,வந்தவாசி சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் செந்தில்குமார், மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன்,தழுதாளி கார்த்தி, வீடுர் ஜெயராமன், மேகநாதன், பன்னீர்செல்வம், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பூவிருந்தவல்லியில் கபடி போட்டி - திராவிட பொங்கல் நிகழ்ச்சி!

திருவள்ளூர், ஜன. 19-

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழர் திருநாளை முன்னிட்டு கபடி போட்டி மற்றும் பல்வேறு விளையாட்டுப் போட்டி திராவிட பொங்கல் நிகழ்ச்சி பாரிவாக்கம், மற்றும் கட்டுப்பாக்கம் ஆகிய ஊராட்சியில் நடைபெற்றது இதில் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமை தாங்கினார்

மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் எம். முத்தமிழ் செல்வன் ,வி. குமார், ஒன்றிய கழக நிர்வாகிகள் டி.அண்ணாமலை, ஏ. ஜனார்த்தன், சு.சுமதி குமார், ஏ.ஆர்.பாஸ்கர், ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.புகழேந்தி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் க.பரிமேலழகன், கே.விக்னேஷ் நிர்வாகிகள் கே.ஜி. ஆர்.ஸ்டாலின் , வழக்கறிஞர் அருண் தகவல் தொழில் நுட்ப அணி ஸ்ரீதர் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்துகொண்டு பாரிவாக்கத்தில் நடைபெற்ற கபடி போட்டி தொடங்கி வைத்து முதல் பரிசு வென்ற அணிக்கு 25 ஆயிரம் ரூபாய் மற்றும் கோப்பை இரண்டாவது இடம் பெற்ற அணிக்கு 20 ஆயிரம் ரூபாய் மற்றும் கோப்பை மூன்றாவது இடம் பெற்ற அணிக்கு 15 ஆயிரம் ரூபாய், நான்காவது அணிக்கு வெற்றி பெற்ற பத்தாயிரம் ரூபாய் மற்றும் கலந்து கொண்ட அனைவருக்கும் ஆறுதல் பரிசு கோப்பைகள் வழங்கினார் இதனை தொடர்ந்து காட்டுப்பாக்கத்தில் நடைபெற்ற உரியடித்தல், கோலப் போட்டி, மியூசிக்கல் சேர், நாட்டியம், நாடகம், பேச்சுப்போட்டி, பாடல் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளை பார்வையிட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும், பொதுமக்கள் ஆயிரம் பேருக்கு படவை, கரும்பு உள்ளிட்ட பொங்கல் தொகுப்புகளையும் வழங்கி வாழ்த்தி பேசினர்.

இதில் வாழை மரங்கள், கரும்பு, மாவிலைத் தோரணங்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. பாரம்பரிய முறைப்படி ஏராளமான பெண்கள் பொங்கல் வைத்து இயற்கைக்கும் சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக வழிபாடு நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் மாநில ஆதிதிராவிடர் நலக் குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பின கே.ஜெ.ரமேஷ், மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு , பொதுக்குழு உறுப்பினர் திருவேற்காடு எஸ்.சங்கர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் விவசாய அணி டி.குமரேசன், வி.தணிகாசலம், ஏ.வி.ரவி, என்.சண்முகம், பூவை எம்.ராம்பாபு, திருமலைராஜ், திருலோக சுந்தர், கேசவன் அன்னம், அருள்நாயகி, விஜயலட்சுமி, செல்வி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் .



தமிழ்நாடு முதலமைச்சர், சமூக நீதி காவலர், கழகத் தலைவர், மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் தனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, வாணாபுரம் பகண்டைக் கூட்டுச் சாலையில், தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை முன்னிட்டு, மாட்டு வண்டியுடன் குடும்பத்துடன் வருகை புரிந்து கழக சொந்தங்கள் மற்றும் பொதுமக்கள் என 30000கும் மேற்பட்டவர்களை நேரில் சந்தித்து,தைத்திருநாள் நல்வாழ்த்துக்களை கூறி அவர்களுடன் பொங்கல் வைத்து, தைத்திருநாள் பண்டிகையை கொண்டாடி பொதுமக்களை மகிழ்வித்து மகிழ்ந்தார். மேலும் பொங்கல் திருவிழாவிற்கு வருகை தந்த பொதுமக்கள் அனைவருக்கும் சக்கரை பொங்கலுடன் கூடிய அறுசுவை சைவ உணவு வழங்கப்பட்டது.

### சட்டப்பேரவைத் தேர்தல் – 2026 – கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான

# ‘தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு’ ஓசூர் வருகை!

### மாவட்டச் செயலாளர்கள் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. – தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கிருஷ்ணகிரி, ஜன. 19 -

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. - கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:





பத்தாண்டுகாலம் இருண்டு கிடந்த தமிழ் நாட்டை மீட்டெடுத்து, எல்லோர்க்கும் எல்லாம் என ஒளிமயமான பாதையில் பயணிக்கச் செய்திருக்கும் திராவிட மாடல் அரசு கடந்த தேர்தலில் அளித்த 505 வாக்குறுதிகளில் 404 க்கும் அதிகமானவற்றை நிறைவேற்றி, சொன்னதைச் செய்த அரசாக மட்டும் இல்லாமல் சொல்லாததையும் செய்த அரசாக மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளது.

இந்த சாதனைகளின் தொடர்ச்சியாக அடுத்த ஐந்தாண்டுகளுக்கான வளர்ச்சியைத் திட்டமிட ‘திராவிட மாடல் 2.0’ தயாராகி வருகிறது. இந்த புதிய பயணத்திற்கான தேர்தல் அறிக்கை என்பது வெறும் காகிதமல்ல, அது மக்களின் குரலாக இருக்க வேண்டும் என்ற மாண்புமிகு கழக தலைவர் அவர்களின் விருப்பத்தின்படி ஒவ்வொரு தமிழ்நாட்டு குடிமகனின் தேவையையும் பிரதிபலிக்கும் வகையில், மக்கள் பங்கேற்புடன்கூடிய ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தல் அறிக்கையை உருவாக்க கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு தயாராகி வருகிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைபடியும்,

கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி 2026 சட்டப் பேரவை தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில் டி.கே.எஸ்.இளங்கோவன், முனைவர் கோவி. செழியன், முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், முனைவர் டி.ஆர். பி.ராஜா, எம்.எம். அப்துல்லா, பேரா. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மருத்துவர் எழிலன் நாகநாதன், கார்த்திகேய சிவசேனாபதி, திருமதி. ஆ.தமிழரசி ரவிக்குமார், ஜி.சந்தானம் ஐ.ஏ.எஸ். சுரேஷ் சம்பந்தம் ஆகிய 12 பேர் அடங்கிய குழு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஒசூரில் மாநகராட்சியில் உள்ள ஆனந்த் கிராண்ட் பேலஸ் திருமண மண்டபத்தில் வரும் 19 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்கவிருக்கிறார்கள்.

அதுசமயம் கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் முனைப்புடன் செயல்பட்டு வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள், தொழில் முனைவோர், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ., தே.மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் தமது அறிக்கையில் கூறியுள்ளனர்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம், CAPTAIN SQUAD CC நடத்தும் இரண்டாம் ஆண்டு மாபெரும் கிரிக்கெட் போட்டியை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சாந்தராஜ், வார்டு செயலாளர் தங்கம், நகர மாணவர் அணி அமைப்பாளர் பிரவீன் குமார், சுந்தர்லால் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எஸ். பூபாலன்**

**சனவரி 19 (2006)**



இளம் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

கிளைக் கழக பிரதிநிதி, நகர பொருளாளர் என பொறுப்பு வகித்து தொடர்ந்து மூன்று முறை மதுராந்தகம் நகரச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

மதுராந்தகம் கூட்டுறவு பால் சொசைட்டி தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**